சிறப்பிதழ்
Special Issue

2-ஆடி 2050
18-July 2019

ISSN : 2321-0737

*Chief Editor*
*Dr. M. Sadik Batcha*
*Advisory Editor*
*Dr. N. Chandrasegaran*
*Editorial Board*
*Dr. S. Kumaran*
*Dr. Oppila Mathivanan*
*Dr. R. Rajagopal*
*Dr. Aranga. Pari*
*Dr. PM. Jamahir*
*Dr. S. Rajaram*
*Dr. R. Velmurugan*
*Dr. S. Chitra*
*Dr. E.R. Ravichandran*
*Dr. Ganesan Ambedkar*
*Dr. K. Thilagavathi*
*Dr. P. Velmurugan*
*Dr. G. Sheik Meeran*
*Dr. P. Selvakumar*
*Dr. M. Karunanithi*
*Dr. A. Kaleel Rahman*
*Dr. A. Senthil Kumar*
*Dr. S. Tamil Velu*
*Dr. M. Arunachalam*
*Dr. R.Vijayarani*
*Dr. V. Dhanalakshmi*
*Dr. S. Ramesh*
*Dr. J. Chandrakala*
*Dr. C. Prabhakaran*
*Dr. P. Santhi*
*Prof. Balasundaram Elayathamby*
*Dr. A. Thoufiq Rameez*
*Dr. S. Bharathi Prakash*
*Dr. J. Raja*
*Dr. J. Selva Kumar*
*Dr. D. Alagudurai*
*Dr. Chandrika Subramaniyan*
*Dr. Manivannan Murugesan*
*Dr. V. Kalathi*
*Mr. G. Senthil*

பல்கலைக் கழக மானியக் குழு அங்கீகாரம் பெற்றத் தமிழ்ப் பன்னாட்டு ஆய்விதழ்
UGC APPROVED INTERNATIONAL THAMIZH JOURNAL
UGC Journal No.40719

# செம்மொழித் தமிழ்

(பன்னாட்டுப் பன்முகத் தமிழ் காலாண்டு ஆய்விதழ்)
(கலை & மனிதவியல்)

# Journal of Classical Thamizh

(A Quarterly International Multilateral Thamizh Journal)
(Arts & Humanities)

பன்னாட்டுக் கருத்தரங்கம் -2019
சிறப்பிதழ் : தமிழ்த்துறை (தன்நிதி)
நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி (தன்னாட்சி)
பொள்ளாச்சி – 642 001, தமிழ்நாடு, இந்தியா.

## தமிழ் இலக்கியத்தில் மனிதநேய மாண்புகள்

சிறப்பிதழ் ஆசிரியர்
**Special Issue Editor**
முனைவர் இரா. விஷ்ணுப்பிரியா
உதவிப்பேராசிரியர்

பதிப்புக்குழு உறுப்பினர்கள்
முனைவர் த. பரமேஸ்வரி (துறைத்தலைவர்)
முனைவர் த. கீதாஞ்சலி முனைவர் ந. பிரகாஷ் முனைவர் இரா. ஜெயந்தி
முனைவர் ம. சித்ரகலா முனைவர் மு. சுகந்தி பேரா. ர. சூர்யா பேரா. அ. மகபுபூ
தமிழ்த்துறை (தன்நிதி), நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி (தன்னாட்சி), பொள்ளாச்சி -6

*Published by*
**RAJA PUBLICATIONS**
No. 10 (Upstair), Ibrahim Nagar, Khajamalai,
Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India.
Mobile : 9600535241
Website : www.rajapublications.com

4 பகுதி-2
சிறப்பிதழ்
Special Issue

| | | |
|---|---|---|
| | திருக்குறளில் மனித மாண்புகள் | |
| 95. ந. வெங்கடேஷ் | சங்கப் பாடல்களில் மனிதநேயம் | 346-348 |
| 96. சு.நளினி | மணிமேகலை உணர்த்தும் மனிதநேயம் | 349-351 |
| 97. சௌ. மைதிலி | மனித நேய நோக்கில் மலர்வதியின் 'காத்திருந்த கருப்பாயி' நாவல் | 352-355 |
| 98. ஜோ. ஜீவா | நீலபத்மநாபன் கவிதைகளில் மனிதநேய மாண்புகளின் இழப்பு | 356-358 |
| 99. டு. ஜோஸ் விஜி | குறுந்தொகையில் திணைசார் மக்களின் மனித நேய மாண்புகள் | 359-362 |
| 100. B.S.ஆஷா | சிலப்பதிகார மாந்தர்களின் மனிதநேயமாண்புகள் | 363-365 |
| 101. அ.மகபூபு | தமிழ் இலக்கியத்தில் மனிதநேய வாழ்வியல் மதிப்புகள் | 366-369 |
| 102. பொ.மா.பழனிசாமி | சங்க புறப்பாடல்களில் மனித நேய சிந்தனைகள் | 370-374 |
| 103. பா.அருள்ஜோதி | சுந்தரகாண்டத்தில் மனிதநேய மாண்புகள் | 375-379 |
| 104. ம.சித்ரகலா | இலக்கியத்தில் மனித நேயம் தமிழ் இலக்கியங்களை முன்வைத்து | 380-385 |
| 105. அமுதன் | | 386-389 |
| 106. S.Jagadambal & Dr. K. Perumal | Spirituality Fosters Humanity | 390-393 |
| 107. டாக்டர். சு.பிரசாத் & செ.சண்முகவடிவு | சித்தர் இலக்கியங்களில் மனிதநேயம் | 394-399 |
| 108. த. மகிலா ஜெனி | விவேக சிந்தாமணியில் மனித நேயம் | 400-403 |
| 109. த.ரதீஸ் | இலக்கியத்தில் மனிதநேயம் | 404-407 |
| 110. ர.மாலதி ரவீந்திரன் | சங்க இலக்கியங்களில் மனிதநேயம் | 408-410 |
| 111. திருமதி.க.தேவி | இலக்கியங்களில் மனிதநேயச் சிந்தனைகள் | 411-416 |
| 112. ந.ஜெயசுதா | இலக்கியங்களில் மனிதநேயம் | 417-419 |
| 113. இரா.ஜெயந்தி | திருக்குறள் காட்டும் மனிதநேயக் கருத்தாக்கம் | 420-423 |
| 114. க. உஷா | திருக்குறளும் மனித மாண்புகளும் | 424-427 |
| 115. D. ஞானசௌந்தரி | கீதைகூறும்ஞானம் | 428-432 |
| 116. க.முத்துஇலக்குமி | பாரதியார் கவிதைகளில் மனிதநேயப்பண்பு | 433-436 |
| 117. க.தனலட்சுமி | தமிழ் இலக்கியங்களில் மனிதநேயம் | 437-439 |
| 118. பொ.வீரசித்திவிநாயகன் | இலக்கியங்களில் திருக்குறள் உணர்த்தும் மனிதநேயமும் மருத்துவமும் | 440-442 |
| 119. மு.சுகந்தி | புறநானூற்றுப் பாடல்களில் மனிதநேயம் | 443-446 |
| 120. த.பரமேஸ்வரி | புதுக்கவிதைகள் உணர்த்தும் புரையோடிய மனிதநேயம் | 447-450 |
| 121. பேரா ர.சூர்யா | மனிதநேயச் சிந்தனைகள் | 451-453 |
| 122. மு.அபிநயா | கருவறைவாசனையில் பெண்ணுலகம் | 454-456 |
| 123. ஜோதிமணி.து | காட்டுக்குட்டியில் மாண்டுபோகும் மனிதநேயம் | 457-460 |
| 124. இரா.விஷ்ணுப்பிரியா | புலமையும் மனிதநேயமும் | 461-469 |
| 125. திலகவதி பு | புகழேந்தி புலவர் இயற்றிய நல்லதங்காள் கதையில் மானுடம் | 470-473 |

# இலக்கியங்களில் மனிதநேயம்

முனைவர் ந.ஜெயசுதா
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
என்.ஜி.எம் கல்லூரி, பொள்ளாச்சி.

மனித இனத்திற்கே உரிய பண்பு மனிதநேயம். மனித நேயம் என்ற சொல்லுக்கு 'மனிதத்தன்மை' (humanity) என்று கிரியாவின் தற்காலத்தமிழ் அகராதி பொருள் கூறுகிறது.

கன்பூசியஸ், மனித நேயத்தைப்பிற அல்ல சக மனிதனிடத்தில் அன்பு செலுத்துவது என்றார். இஸ்லாமியத்தில், எவன் ஒருவன் கொலைக்குப் பதிலாகவோ அல்லது பூமியில் ஏற்படும் குழப்பத்தைத் தடுப்பதற்காகவோ, மற்றொருவரைக் கொலை செய்கிறானோ அவன் மனிதர்கள் யாவரையுமே கொலை செய்தவன் போலாவான். மேலும் எவரொருவர் ஓர் ஆத்மாவை வாழ வைக்கிறாரோ அவர் மக்கள் யாவரையும் வாழ வைப்பவரைப் போலாவார் (அல்.குர்ஆன்5:32) என்று குரானிலும் மனிதநேயத்தை, சிறு உதவியே ஆயினும் அது பெரிய வாழ்வு கொடுத்து உதவிய மனிதப் பண்பையே நேயமாகச் சுட்டுகிறது.

உலகில் எத்தனையோ பேர் கண்ணுக்குத் தெரியாமல் மனித நேயத்துடன் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். சாதி, மதம், இனம், மொழி இவை எல்லாவற்றுக்கும் ஒரு அடையாளம் உண்டு. ஆனால் எந்த அடையாளமும் இல்லாமல் எல்லாவற்றுக்கும் மேலாகப் போற்றப்படுவது மனித நேயம். மனிதன் தன்னை அறிதலோடு பிறரையும் நேசித்து அன்பாகவும் ஆரோக்கியமாகவும் உதவும் மனப்பாண்மையோடு இருக்க வேண்டும்.

'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்' என்ற வள்ளலாரின் கூற்றே மனித நேயம் என்றால் என்ன? என்பதை மிகவும் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது. ஒரு உயிரின் மீது வைக்கும் அன்பு,பாசம், கருணை, இரக்கம், நட்பு, காதல், ஜீவகாருண்யம் என்றெல்லாம் இதை வகைப்படுத்த முடியும். மனிதன் மீது மட்டுமல்ல, மிருகம், பறவை, மரம் செடி, கொடி என்று எதன் மீதும் அன்பு கொண்டு இரக்கம் காட்டினால் அது மனித நேய உணர்வு.

பாரதியார்,

**மனிதர் உணவை மனிதர் பறிக்கும்**
**வழக்கம் இனியுண்டோ**
**மனிதர் நோக மனிதர் பார்க்கும்**
**வாழ்க்கை இனியுண்டோ**

என மனிதன் தன் இனத்தின் மீது கூட இரக்கம் காட்டாத நிலையைக் கண்டவர் தன் எழுத்தக்களால் சாடுகின்றார்.

வள்ளுவர்,

**வறியார்க்கொன்று ஈவதே ஈகை மற்று**
**எல்லாம்**
**குறி எதிர்ப்பை நீரது உடைத்து**
(குறள் 221)

ஈகை, இரக்கம் என்பதெதெல்லாம் இல்லாதார்க்கு ஒன்றினைக் கொடுப்பதே என்கிறது. இது கொடுக்கும் மனம் கொண்ட மனிதநேயமுடைய மனிதனிடம் மட்டுமே இது சாத்தியம் எனலாம்.

**உணவு:**

ஐம்பூதங்களையடுத்து உணவு மனிதனக்கு மிக அவசியமானது, சங்க இலக்கியம் உணவு கொடுத்தவரை உயிர் கொடுத்தவர் என்ற சொல்கிறது.

**நீரின்றி யமையா யாக்கைக்கு எல்லாம்**
**உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே**
**உண்டி முதற்றே உணவின் பிண்டம்**
(புறம்18,17-20)

என்று புறப்பாடல் உணவு கொடுத்தோர் உயிர் கொடுத்தது போன்று உயர்வான நிலையைய ஏற்படுத்தியுள்ளனர். ஏனெனில் பசிப்பிணியின்றி இவ்வுலகில் அனைவரும் வாழ வேண்டும் என்ற நிலையில் சங்க காலம் தொட்டு இக்காலம் வரை விருந்தோம்பும் பண்பை தமிழர்களிடையே உண்டு.

நல்விருந்தோம்பலின் நட்டாள்
என் பசி களைந்தோன் (385: 7 புறம்)

உணவின்றி வருந்துவோர்க்கு உணவளித்தல் இன்றியமையாத அறமாகப் போற்றப்பெற்றது. உணவு இல்லையேல் உயிர்கள் இல்லை என்பதை உணர்ந்த புலவர் உழவின் மேன்மையை,

கழிந்தது பொழிந்து என வான் கண் மாறினும்
தொல்லது விளைந்து என நிலம் வளம் சுலப்பினம்
எல்லா உயிர்க்கும் இல்லால் வாழ்க்கை
(புறம்203 1-3)

என உழவு சிறப்படைந்து குடிகள் உயர்ந்து அரசனும் மதிக்கப்படுவான். உயர்வான் என மனித உயிர்கள் மீது கொண்ட மனித நேயத்தை இப்பாடல் சுட்டுகின்றது.

உண்மின் கள்ளே! அடுமின் சோறே
எறிக திற்றி ஏற்றுமின் புழுக்கே
வருநர்க்கு வரையாது பொலங்கலந் தெளிர்ப்பு

தன்னை நாடி வருபவர் உண்ண வேண்டி விருந்தோம்பலுக்கு அன்பு மாறாத ஆட்டு வணிகர் இறைச்சியை வேக வைத்துத் தாளித்த சாதம் கடல் ஒலி போலவும் புகை நிறைந்தும் உள்ள நாடு என நம் மக்களும் மனித நேயமுடையவர்கள் என்பதை வெளிப்படுத்த முடிகின்றது.

மானம் குலம் கல்வி வண்மை அறிவுடைமை
தானம் தவம் உயர்ச்சி தாளாண்மை - தேனின்
கசிவந்த சொல்லியர் மேல் காமுறுதல் பத்தும்
பசிவந்திடப் பறந்து போம (நல்வழி 26)

என உலகிலே பசி வந்திட பத்தும் பறந்து போகும் என ஔவையார் பசிப்பிணியின் கொடுமையைச் சுட்டி, அதனைத் தீர்ப்பது சிறந்த மனித நேயம் என்ற உணர்வை நம்முள் எழச் செய்தவர்.

சிலம்பில் இம்மண் உயிர்களையெல்லாம் காக்கும் பொருட்டு, ‘மண் உயிர் ஓம்பும் இம்மாபெரும் பாத்திரம்’ (14-87)என அமுதசுரபியைப் புகழ்கிறான் ஆபுத்திரன்.

மேலும்,

ஆருயிர் மருந்து ஆய் ஈங்கு இப் பாத்திரம் (11.105-106)

அறம் கரியாக அருள் சுரந்து ஊட்டும் (11.120)

‘ஈன்ற குழவி முகம் கண்டு இரங்கி தீம்பால்
சுரப்போள் தன் முலை போன்று சுரக்கும்
விஞ்சைப் பாத்திரம்’
(11.114-116)

ஆபுத்திரம் கை அமுத சுரபி எனும்

மாபெரும் பாத்திரம் மடக்கொடி கேளாய்
(11.44-45)

என உலகில் உள்ள பசிப்பிணியைப் போக்கும் பொருட்டு, மனித நேய உணர்வுடைய ஆபுத்திரன் கையில் மட்டுமே அந்த அமுதசுரபி கிடைத்தது.

எல்லா உயிர்கள் மீதும் பாசம், அன்பு கொண்ட நல் உள்ளங்கள் இன்றும் அழியா வரலாகின்றது.

நகரம்:

நகரமயமாதல் பெருகி வருகின்ற நிலையில் மக்கள் கிராமங்களையும்:கிராமிய உணர்வுகளையும் தொலைத்து நிற்கின்றான். இன்றைய நகரத்தின் நிலையை படம் பிடித்துக் காட்டுகிறது.

நகரத்தின் நாலாதிசைகளிலிருந்தும்
கேட்கின்றன
நாய்க்குரைப்புச்சப்தங்கள்
உதிர்ந்துகிடக்கும்
மஞ்சட்பூக’கள் பதற்றமுற
அலறிச் செல்கின்றன
சக்கர வாகனங்கள் புகைகக்கி
நீலநிற மண்ணெண்ணெய்
வாங்கிச் செல்கிற பெண்
அப்பால் செல்ல முடியாதபடி
பூமிபிளக்கக் கால் உதைத்துச்
சத்தம் போடுகிறான்
கால் சட்டை மட்டும் அணிந்த
மொட்டைப் பைத்தியக்காரன்

(நிலா பார்த்தல், ப.25)

என்று நீளும் கல்யாண்ஜியின் இக்கவிதை நகர வாழ்க்கையில் பசுமையான கிராமியம், மணம் நிறைந்த மண், பூக்கள், பந்தம் எல்லாம் இல்லாது போகின்றது. மனித நேசமே இல்லாது காய்ந்து வெருச்சோடி உள்ள நகரநிலையை உணர்த்தகின்றது. மேலும் ஒரு புதுக்கவிதை மனித நேயம் பற்றி,

இயற்கை அன்னையின் சீற்றத்தில்
பொங்கியது
ஆறும், ஏரியும் மட்டுமா?
மனித நேயமும் சேர்ந்துதானே
பிரளய நேரத்தில் பிறமொழி மக்களும்
நெருங்கிய
உறவாக மாறி தங்கள் கரம் நீட்டி பல
இன்னுயிர் காக்க காரணம்..... இன்னுமும்
இம்மண்ணில் வற்றாமல்
ஊறும் மனித நேயம்!
இது எம்மதம் அது உம் மதம் என பேதம்
பார்க்காமல்எம்மதமும் சம்மதம் அதுவே
என்
வேதம் இனி என
நம்மை சொல்ல வைத்ததும்... நம் உயிர்
காத்த வேற்று மத மனித நேயம்!
வீடிழந்த மக்களை தேடி அழைத்து நம்
வீட்டில் தங்க
இடம் கொடுத்து உன்ன உணவும் நாம்
கொடுத்த அந்த தருணம்
நம்முள் தூங்கி விட்ட மனித நேயத்தை
நாமே தட்டி எழுப்ப,
இயற்கை நமக்கு கொடுத்த ஒரு
அரிய வாய்ப்பு!
இயற்கையின் சீற்றத்தில் பொங்கி
வழிந்த இந்த மனித நேயம்
இனி என்றும்
மங்காமல், வற்றாமல் ஒரு ஜீவ
நதியாகவே தங்கி ஓட வேண்டும்
நம்முள்!

மனித நேயம் பெற வேண்டும் என்ற எண்ணத்தை விதைக்கின்றது இக்கவிதை.

தான் நகன் என்ற நிலையிலிருந்து நாம் தாம் என்ற மனநிலையோடு காக்கும் கரங்களைக் கொண்டு ‘ஈயேன்’என்றில்லாமல் அனைவருக்கும் அன்பு, பண்பு, பாசம், பொறுமை, இரக்கம் என்ற நிலைகளிலெல்லாம் பேருதவியாக உம் கரம் கொண்டு மனமுவந்து செய்வீர். மனிதநேயம் வளரும். வளரும்...!

❖❖❖